# பொருளுடன் திருக்குறள் ஒப்புவித்தல் / Thirukkural Recital with Meaning

| வயது/Ages: 7 - 8 | நிலை/Level : 4 |
|---|---|
| **விதிமுறைகள்:** | 1. போட்டிகள் அரங்கினுள் நடைபெறுவதால், போட்டியாளர்கள் நேரில் பங்கேற்க வேண்டும்<br>2. போட்டியாளர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முப்பது குறள்களிலிருந்து பொருளுடன் ஒப்பிக்க வேண்டும்<br>3. மூன்று நிமிடங்களுக்குள் அதிக குறள்களை ஒப்பிப்பவர் வெற்றி பெற்றவர்<br>4. ஒரு குறளை ஒப்பித்தவுடன், அதன் பொருளையும் ஒப்பிக்க வேண்டும். அதாவது குறளும், பொருளும் அடுத்தடுத்து இருக்க வேண்டும்<br>5. குறளைப் பொருளுடன் தெளிவாகவும், முழுமையாகவும் ஒப்பிக்க வேண்டும்<br>6. குறளின் ஒவ்வொரு சொல்லையும் தெளிவாக உச்சரிக்க வேண்டும்<br>7. உங்களின் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் குறளின் பொருளைச் சொல்லாம்<br>8. வெற்றியாளர் சொல் உச்சரிப்பு, குறள் உள்ளடக்கம், தங்கு தடையின்றி சொல்லுதல், ஒப்புவிக்கும் விதம் மற்றும் நேர உபயோகம் ஆகியவை கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவர்<br>9. நடுவர்களின் முடிவே இறுதியானது |

Copyright © 2026 All Rights Reserved

| | |
|---|---|
| **Instructions:** | 1. The competition will be held in a venue where contestants should participate in person<br><br>2. Participant must recite Thirukkurals with meaning from the pre-selected list of 30 (Scroll below)<br><br>3. The winner recites the most in the given 3 minutes<br><br>4. Each Thirukkural must be recited with meaning<br><br>5. Each recited thirukkural with meaning must be clear and complete<br><br>6. Each word in the kural should be pronounced clearly<br><br>7. Your own words can be used to say the meaning of the kural<br><br>8. Winner will be evaluated based on 5 criteria - Pronunciation, Content, Flow, Presentation, Duration<br><br>9. Jurors' decisions are final |

Copyright © 2026 All Rights Reserved

## திருக்குறள் பட்டியல்/Thirukkural List

| 1) | குறள் 02 | கடவுள் வாழ்த்து |
|---|---|---|

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

உரை:
தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றுஇருந்தாலும் அதனால் என்ன பயன்?. ஒன்றுமில்லை.

| 2) | குறள் 20 | வான்சிறப்பு |
|---|---|---|

**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு.**

உரை:
உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

| 3) | குறள் 31 | அறன்வலியுறுத்தல் |
|---|---|---|

**சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு.**

உரை:
சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர ஆக்கமளிக்கக் கூடிய வழி வேறென்ன இருக்கிறது.

Copyright © 2026 All Rights Reserved

4) குறள் 71 அன்புடைமை

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.**

உரை:
உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பங்காணுமிடத்து, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும்.

5) குறள் 92 இனியவைகூறல்

**அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்.**

உரை:
முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது, அகம் குளிர்ந்து ஒன்றைக் கொடுப்பதை விட மேலான பண்பாகும்.

6) குறள் 101 செய்ந்நன்றியறிதல்

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.**

உரை:
தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்கு செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைமாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

7) குறள் 114 நடுவு நிலைமை

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்ப படும்.**

உரை:
நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்.

Copyright © 2026 All Rights Reserved

8) குறள் 138 **ஒழுக்கம் உடைமை**

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.**

உரை:
நல்லொழுக்கம், வாழ்க்கையில் நன்மைக்கு வித்தாக அமையும். தீயொழுக்கம், தீராத துன்பம் தரும்.

9) குறள் 151 **பொறையுடைமை**

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

உரை:
தன்னை வெட்டுவோபண்பாகும்ரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான .

10) குறள் 183 **புறங்கூறாமை**

**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூற்றும் ஆக்கத் தரும்.**

உரை:
கண்ட இடத்தில் ஒன்றும், காணாத இடத்தில் வேறொன்றுமாகப் புறங்கூறிப் பொய்மையாக நடந்து உயிர் வாழ்வதைவிடச் சாவது நன்று.

11) குறள் 215 **ஒப்புரவறிதல்**

**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு.**

உரை:
பொதுநல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின் செல்வமானது ஊர் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் நீர் நிறைந்த ஊருணியைப் போன்றதாகும்.

Copyright © 2026 All Rights Reserved

| 12) | குறள் 267 | தவம் |
|---|---|---|

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.**

உரை:
நெருப்பு சுடச்சுடப் பொன்னின் ஒளி பெருகுவது போலத் துன்பம் வருத்த வருத்தத் தவம் செய்பவர்க்கு ஞானம் பெருகும்.

| 13) | குறள் 291 | வாய்மை |
|---|---|---|

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.**

உரை:
பிறருக்கு எள்முனையளவு தீமையும் ஏற்படாத ஒரு சொல்லைச் சொல்வதுதான் வாய்மை எனப்படும்.

| 14) | குறள் 319 | இன்னாசெய்யாமை |
|---|---|---|

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா**
**பிற்பகல் தாமே வரும்.**

உரை:
பிறருக்குத் தீங்கு விளைவித்துவிட்டோம் என்று ஒருவர் மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே, அதேபோன்ற தீங்கு அவரையே தாக்கும்.

| 15) | குறள் 355 | மெய்யுணர்தல் |
|---|---|---|

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

உரை:
எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும் (அத்தோற்றத்தை மட்டும் கண்டுமங்காமல்) அப் பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வாகும்.

Copyright © 2026 All Rights Reserved

| 16) | குறள் 411 | கேள்வி |
|---|---|---|

**செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்து ளெல்லாந் தலை.**

உரை:
செவியால் கேட்டுப் பெறும் செல்வமே சிறந்த செல்வம்; இது பிற செல்வங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது.

| 17) | குறள் 435 | குற்றங்கடிதல் |
|---|---|---|

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

உரை:
தனக்கு ஒரு குற்றம் வருவதற்கு முன்பே வராமல் காத்துக் கொள்ளாத அரசு, நெருப்பிற்கு முன் வைக்கப்பட்ட வைக்கோல் போல அழிந்துபோகும்.

| 18) | குறள் 612 | ஆள்வினையுடைமை |
|---|---|---|

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

உரை:
எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதனை முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும். இல்லையேல் அரைக்கிணறு தாண்டிய கதையாகி விடும்.

| 19) | குறள் 661 | வினைத்திட்பம் |
|---|---|---|

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற.**

உரை:
மற்றவை எல்லாம் இருந்தும் ஒருவரது மனத்தில் உறுதி மட்டும் இல்லாவிட்டால் அவரது செயலிலும் உறுதி இருக்காது.

20) குறள் 722 **அவையஞ்சாமை**

**கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.**

உரை:
கற்றவரின் முன் தாம் கற்றவற்றை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லாரினும் மேலானவராக மதித்துச் சொல்லப்படுவார்.

21) குறள் 754 **பொருள்செயல்வகை**

**அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.**

உரை:
தீய வழியை மேற்கொண்டு திரட்டப்படாத செல்வம்தான் ஒருவருக்கு அறநெறியை எடுத்துக்காட்டி, அவருக்கு இன்பத்தையும் தரும்.

22) குறள் 801 **பழைமை**

**பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.**

உரை:
பழைமை பாராட்டுவது என்னவென்றால், பழகிய நண்பர்கள், தங்களின் உறவை அழியாமல் பாதுகாப்பதுதான்.

23) குறள் 824 **கூடாநட்பு**

**முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.**

உரை:
சிரித்துப் பேசி நம்மைச் சீரழிக்க நினைக்கும் வஞ்சகரின் நட்புக்கு அஞ்சி ஒதுங்கிட வேண்டும்.

Copyright © 2026 All Rights Reserved

24) குறள் 972 பெருமை

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

உரை:
பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

25) குறள் 987 சான்றாண்மை

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

உரை:
தமக்குத் தீமை செய்வதற்கும் திரும்ப நன்மை செய்யாமல் விட்டுவிட்டால் சான்றாண்மை எனும் நல்ல பண்பு இருந்தும் அதனால் என்ன பயன்?.

26) குறள் 1000 பண்புடைமை

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யாற்றிரிந் தற்று.**

உரை:
நல்ல பண்பு இல்லாதவன் அடைந்த பெரும் செல்வம், பாத்திரக் கேட்டால் அதிலுள்ள நல்ல பால் கெட்டுப் போவது போலாம்.

27) குறள் 1031 உழவு

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

உரை:
உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

Copyright © 2026 All Rights Reserved

| 28) | குறள் 1043 | நல்குரவு |
|---|---|---|

**தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவு என்னும் நசை.**

உரை:
வறுமை என்று சொல்லப்படும் ஆசைநிலை ஒருவனைப் பற்றினால், அவனுடைய பழைமையானக் குடிப் பண்பையும் புகழையும் ஒரு சேரக் கெடுக்கும்.

| 29) | குறள் 1069 | இரவச்சம் |
|---|---|---|

**இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள**
**உள்ளதூஉம் இன்றிக் கெடும்.**

உரை:
இரத்தலின் கொடுமையை நினைத்தால் உள்ளம் கரைந்து உருகும், உள்ளதை ஒழிக்கும் கொடுமையை நினைத்தால் உருகுமளவும் இல்லாமல் அழியும்.

| 30) | குறள் 1100 | குறிப்பறிதல் |
|---|---|---|

**கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.**

உரை:
ஒத்த அன்புடன் கண்களோடு கண்கள் கலந்து ஒன்றுபட்டு விடுமானால், வாய்ச்சொற்கள் தேவையற்றுப் போகின்றன.

Copyright © 2026 All Rights Reserved